JETIR.ORG ISSN: 2349-5162 | ESTD Year : 2014 | Monthly Issue
JOURNAL OF EMERGING TECHNOLOGIES AND INNOVATIVE RESEARCH (JETIR)
An International Scholarly Open Access, Peer-reviewed, Refereed Journal

இயற்கையின் அரண்மனை - பறம்பு மலை

The Palace of Nature - Parambu Hill

ஆன்சி சகாய நிது மா. பதிவு எண்: 241131501014 முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர் , தமிழ்க்கலை ஆய்வகம், தெ. தி. இந்துக் கல்லூரி, நாகர்கோவில், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி-12.
Gmail-juvanasrnithu@gmail.com ph-9385404796
ORCiD NO – https://orcid.org/0009-0003-1019-8698

ANCY SAHAYA NITHU M. ,Reg.No: 241131501014 , RESEARCH SCHOLAR, DEPARTMENT OF TAML, S.T. HINDU COLLEGE,NAGRCOIL -02,MANONMANIYAM SUNDARANAR UNIVERSITY, TIRUNELVELI-12
Gmail-juvanasrnithu@gmail.com ph-9385404796

ORCiD NO – https://orcid.org/0009-0003-1019-8698

நெறியாளர்: **முனைவர் இரா.நி.ஸ்ரீகலா**, உதவிப்பேராசிரியர் , தமிழ்க்கலை ஆய்வகம், தெ. தி. இந்துக் கல்லூரி, நாகர்கோவில், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி-12 .
Gmail-Sreeshakthi.1974@gmail.com. Ph-9486679666
ORCiD NO – https://orcid.org/0000-0002-1286-571X

GUIDE: DR.R.N.SREEKALA, ASSISTANT PROFESSOR, DEPARTMENT OF TAML, S.T. HINDU COLLEGE, NAGRCOIL -02, MANONMANIYAM SUNDARANAR UNIVERSITY, TIRUNELVELI-12,
Gmail-Sreeshakthi.1974@gmail.com. Ph-9486679666
ORCiD NO-https://orcid.org/0000-0002-1286-571X

Abstract

The Sangam Age shines exceptionally bright in the history of Tamil culture. It is revered as a time of unity where nature, humankind, and governance coexisted harmoniously. The glorious Parambu Hill of the Sangam era is portrayed as the Palace of Nature. The green expanse of the hill, its pristine environment, the rich atmosphere, and the sweet sounds of its living creatures all combined to make Parambu Malai a Fortress of Nature. The person who breathed life into Parambu Malai was Vēl Pāri . Pari's rule was not mere politics; it was a confluence of humanity, nature conservation, and people's welfare. Parambu Malai also served as the symbol of Pari’s heroic life. This study rapidly examines the geographical features of Parambu Malai, its natural resources, the unique nature of Pari's governance, the lifestyle of the Parambu people, the war-time circumstances, and the literary evidence.Through the glory of Pari found in the Sangam literary verses, the

natural splendor of Parambu Hill, and the friendship that reaches its peak in the poems of Kapilar (the poet), one realizes that Parambu Malai is not just a place but a cultural symbol. This research emphasizes that Parambu Malai, where the three elements—nature, the king, and the people—came together to create an epic, is not just a historical fact. Instead, the "Palace of Nature, Pari's Parambu Hill" is also a high standard of Tamil culture, a lesson in humanity, a symbol of love for nature, and a rare emblem of heroic excellence.

Keywords

Eayarhai, ,Kurinji, Parampu, Vaiduriyam , Moolihai.

Reference

1. Alex Jacob C., Akananuru Kurinji Songs in the Intricate, International Journal of Tamil Language and Literature, E-ISSN 2581-7140, Volume -2, Issue -1, pp. 13-19, July 2019.

2. Iravindran P., Friendship in the Intricate, International Journal of Tamil Language and Literature, E-ISSN 2581-7140, Volume -6, Special Issue Issue -2, pp. 30-47, June 2024.

3. Raghavaiyangar R., Pari Katha, Annamalai University, Annamalai Nagar, 2nd edition 1978.

4. Kandasamy Mudaliar, Sirupanatruppada Explanation, Unity Office, Thyagaraya Nagar Madras 1947.

5. Govindan Ko., Sangam Tamil Poet Series -1 Kapilar, Tirunelveli, South Indian Saiva Siddhanta Book Publishing Company, Ltd., Tirunelveli, Chennai 1, 1200.

6. Sivashankar P. The Speciality of Nature in Atruppada Literatures, International Journal of Tamil Language and Literature, E-ISSN 2581-7140, Volume -2, Issue -1, pp. 92-97, July 2019.

7. Sudaroli P., Kadayezh Vallalal, International Tamil Journal, ISSN 2454-3993, Volume -2, Issue -3, pp. 116-120, January 2019.

8. Sudhadevi K., Natural Environment in Purananuot, New Assembly, Tamilmanam International Tamil Journal, ISSN 2456-821X, Volume -7, Issue -2, pp.1118-1121, June 2023.

9. Sornapamila I., Life of Kurinji Land People, International Journal of Tamil Language and Literature, E-ISSN 2581-7140, Volume -2, Issue -1, pp. 130-135, July 2019.

10. Deepalaxmi S., Cultural events in the Ainguru Kurinji Thinai, International Journal of Tamil Language and Literature, E-ISSN 2581-7140, Volume -6, Special Issue Issue -2, pp. 128-143, June 2024.

11. Durai Rajaram, Kurunthogai Thirumagal Nilayam, New No. 16, Venkat Narayana Salai, T. Nagar, Chennai 600 017, Second Edition 2008.

12. Nagarasan, Pathupattu Part II (Source and Text), New Century Book House, Billet 41 (B) CIDCO, Industrial Estate, Ambattur, Chennai 600 098, Third Printing 2007.

13. Puliyurkesigan, Akananur Kalitriyanai Nirai (Source and Text) Part -1, Saradha Publishing House G 4, Shanthi Akkam -3, Sri Krishnapuram Street, Royapettah Chennai 14, First Edition 2010.

14. Puliyurkesigan, Akananur Nithilakkovai (Source and Text) Part-1, Saradha Publishing House G4, Shanthi Akkam-3, Sri Krishnapuram Street, Royapettah, Chennai 14, First Edition 2010.

15. Puliyurkesikan, Purananoor, Saradha Publishing House, G4, Shanthi Akkam-3, Sri Krishnapuram Street, Royapettah, Chennai 14, First Edition December 2010.

16. Manimozhi D., Kurinji Thinaiyan Professions, International Studies in Tamil Language and Literature, E-ISSN 2581-7140, Volume-2, Issue-1, pp. 178-184, July 2019.

17. Muthulakshmi I., Nature in Tamil Literature, Kamaraj Academic Research Journal, E-ISSN 2582-1466, Volume -1, Issue -3, pp.1-5, September 2019.

18. Moovendhan P.S., Water Management in Sangam Literature, International Journal of Creative Research Ideas- IJCR, ISSN 2320-2882, Volume -11, Issue -11, pp.228-233, November 2023.

19. Latha T., The Gift of the Velir Clan, Puthiyyaam, Tamilmanam International Tamil Journal, ISSN 2456-821X, Volume -7, Issue -3, pp. 304-307, December 2023.

20. Letshumanan M., A Study of Vallal Pariyam Parambu Malai, Nilam International Journal of Art and Culture, E-ISSN 2582-2063, Volume -4, Issue -2, pp.40-50,.February 2023.

21. Varadarasan M., Nature in Ancient Tamil Literature, Pari Nilayam, 90 Broadway, Chennai, 600 018, Second Edition 2006.

22. Venkatesan S., Veeranayagan Velpari, Vikatan Prasum 757, Anna Salai, Chennai, Fourth Edition, November 2020.

ஆய்வுச் சுருக்கம்

தமிழ் பண்பாடு வரலாற்றில் சங்க காலம் மிகச்சிறப்பாக ஒளிர்கிறது. இயற்கை, மனிதன் , அரசாட்சி ஆகியவை ஒருங்கிணைந்து வாழ்ந்த ஒற்றுமை காலமாக அது போற்றப்படுகிறது. சங்க காலத்தில் பெருமை தாங்கிய பறம்பு மலை இயற்கையின் அரண்மனை என சித்தரிக்கப்படுகிறது. மலையின் பசுமை அதன் சூழ்நிலை வளமான வளிமண்டலம் உயிர்களின் இனிமையான ஒலிகள் என அனைத்தும் இணைந்து பறம்பு மலையை இயற்கையின் கோட்டையாக அமைந்துள்ளது. பறம்பு மலைக்கு உயிர் ஊட்டியவர் வேள்பாரி. பாரியின் ஆட்சி வெறும் அரசியல் அன்று , அது மனித நேயம் இயற்கை பாதுகாப்பு மக்கள் நலம் ஆகியவற்றின் சங்கமமாக இருந்தது. பறம்பு மலை பாரியின் வீர வாழ்வின் சின்னமாகவும் விளங்குகிறது. பறம்பு மலையின் புவியியல் தன்மைகள் அதன் இயற்கை வளங்கள் பாரியின் ஆட்சி முறையின் தனித்துவம் பறம்பு மக்களின்

வாழ்க்கை முறை, போர் சூழ்நிலைகள் இலக்கியச் சான்றுகள் ஆகியவற்றை விரைவாக ஆராய்கிறது. சங்க இலக்கியப் பாடல்களில் காணப்படும் பாரியின் பெருமை, பறம்புமலையின் இயற்கைச் சிறப்புகள் கபிலர் பாடல்களில் உச்சமடையும் நட்பு இவற்றின் வழியே பறம்பு மலை வெறும் இடமல்ல ஒரு பண்பாடு சின்னம் என்பதை உணர முடிகிறது. இயற்கை, மன்னன், மக்கள் என்னும் மூன்று கூறுகளும் இணைந்து ஒரு காவியத்தை உருவாக்கிய இடமே பறம்பு மலை அதனால் இயற்கை அரண்மனை பாரியின் பறம்பு மலை என்பது ஒரு வரலாற்று செய்தி மட்டுமன்று அது தமிழர் பண்பாட்டின் உயர் கொடி, மனிதநேயத்தின் பாடம், இயற்கை நேசத்தின் குறியீடு வீரச்சிறப்பின் அறிய சின்னம் என்பதையும் இவ்வாய்வு வலியுறுத்துகிறது.

திறவுச் சொற்கள்

இயற்கை, குறிஞ்சி, பறம்பு, வைடூரியம், மூலிகை.

முன்னுரை

தமிழ் இலக்கிய வரலாற்றில் சங்க காலம் தனித்துவமான பொற்காலமாகக் கருதப்படுகிறது. மனிதன், இயற்கை, அரசாட்சி ஆகியவை ஒன்றோடு ஒன்று பிரிக்க முடியாத பிணைப்பில் வாழ்ந்த சமூக அமைப்பை அந்தக் காலத்தின் இலக்கியங்கள் வெளிப்படுத்துகின்றன. சங்க இலக்கியப் பக்கங்களில் இயற்கை ஒரு பசுமையான பின்னணி அன்று. மனிதன் உயிரோட்டத்துடன் இணைந்த உயிருள்ள சக்தியாக காட்சியளிக்கிறது. அத்தகைய சங்க இலக்கிய வரலாற்றில் பெரும் பங்கு வகிப்பதோடு இயற்கையின் அரண்மனை எனச் சொல்லத்தக்க சங்கக் கவிஞர்களின் கற்பனைக்கு, பசுமையும் பேரழகும் தந்த நிலம் பறம்பு மலை. பறம்பு மலையின் இயற்கைச் சிறப்புகளையும் பாரியின் ஆட்சித் தத்துவத்தையும் பறம்பு மக்களின் வாழ்வியல் பண்பாட்டையும் சங்க இலக்கியச் சான்றுகளின் வெளிச்சத்தில் ஆராய்ந்து இயற்கை, மன்னன், மக்கள் ஆகிய மூன்று கூறுகள் ஒன்றோடு ஒன்று பிணைந்து உருவாக்கிய வாழ்க்கை முறையை இவ்வாய்வு சுட்டிக்காட்டுகிறது.

சங்க இலக்கியத்தில் இயற்கை

சங்க இலக்கியம் தமிழரின் வாழ்க்கை நெறிகளை வெளிப்படுத்தும் பொற்காலச் சான்றாகும். அது இயற்கை காட்சி அமைப்பாக அல்லாமல் மனித உணர்வுகளை பிரதிபலிப்பானவாக சித்தரிக்கப்படுகிறது. தமிழரின் உணர்வுகள் பண்பாட்டு மரபுகள் வாழ்வில் சிந்தனைகள் அனைத்தும் இயற்கையோடு கலந்தே வெளிப்படுகின்றன. இயற்கை என்பது மனிதனின் வாழ்வின் ஆதாரமாகவும் அழகின் அடையாளமாகவும் விளங்குகிறது.

மண் திணிந்த நிலனும்

நிலம் ஏந்தி விசும்பும்

விசும்பு தைவரு வளியும்

வளித் தலைஇய தீயும்

தீ முரணிய நீரும், என்றாங்கு (**புறம், பா. வ.** 1-5, **பக்.** 3)

என மண் நிறைந்த நிலத்தையும் நிலம் ஏந்திய வானையும் ஆகாயத்தின் வழிவரும் காற்றையும் காற்றில் கலந்து வரும் தீயையும் சேர்த்து உலகம் என்பர். ஐம்பூதங்கள் இயற்கையால் படைக்கப்பட்டு இயற்கையோடு இயந்த வாழ்க்கை சங்ககால மக்கள் வாழ்ந்தனர் என இப்பாடல் வரிகள் தெளிவுபடுத்துகின்றன. **இயற்கை, விருந்தியல் ஆகிய இரண்டும் சங்க காலத்தின் பண்புகளாக உள்ளன.** (**பழந்தமிழ் இலக்கியத்தின் இயற்கை, பக்.** 21). மலை, காடு, ஆறு, கடல் வானம், நிலம் என அனைத்தும் இயற்கையின் படைப்புகள் ஆகும். அது மனிதனுக்கு உணவு நீர் காற்று தங்குமிடம் ஆகியவற்றை வழங்குவதோடு மட்டுமின்றி மன அமைதி மற்றும் ஆனந்தத்தைத் தருகிறது. **இயற்கை எழில் நயப்போருக்குக் கபிலரின் பாடல்கள் வற்றாச்சுரங்கம். அவர் பாடல்களிலே கவிதை நயம் உண்டு. கனிந்த இசை உண்டு. கலையின் மெருகு உண்டு. கருத்தின் நுட்பம் உண்டு. பண்பாட்டின் உயிர் உண்டு. இவை யாவற்றையும் தன்னகத்தே கொண்டு ஒளிரும். இயற்கை ஓவியங்களில் காட்சிச்சாலை என்றே கபிலரின் பாடல்களைச் சுட்டலாம். அதிலும் சிறப்பாகக் கொள்ளை எழில் குலவும் குறிஞ்சியே எல்லாமாய்ப் பொலியும் மாண்பினைக் காணலாம். குறிஞ்சிக்கு கபிலர் என்றால் அது எவ்வகையாலும் பொருந்தும். (பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை, பக்.** 120) தமிழ் இலக்கியத்தின் இயற்கை தனித்துவமான இடத்தை பெற்றுள்ளது. சங்க இலக்கிய முதல் இன்றைய படைப்புகள் வரை இயற்கை மனித வாழ்க்கையோடு

இணைந்துள்ளது. இயற்கை என்பது வார்த்தை அன்று காண்போரின் கண்ணிலும் மனதிலும் நிலைத்து பழந்தமிழர் இலக்கியங்களிலும் பரந்து காணப்படுகின்றது.

குறிஞ்சி நிலப் பகுதி

கண்ணும் மனதும் இனிமையை உணரக்கூடிய பசுமையான மலைப் பகுதியே குறிஞ்சி. மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சி எனப்படும். **கல் நிறைந்த மலை நிலமே முதற்கண் தோன்றிய நிலம் என்பார் நில நூல் வல்லார்**. (**கபிலர்**, **பக்**. 80) குறிஞ்சிப் பாடலில் இயற்கையின் சிறப்பை எடுத்துரைக்கின்ற கபிலர் பாடல் வரிகள் வழியாக நம்மை குறிஞ்சி நிலப் பகுதிக்கும் கொண்டு செல்கின்றார்.

ஆடுஅமைக் குயின்ற அவிர்துளை மருங்கின்
கோடை அவ்வளி குழலிசை ஆக
பாடு இன் அருவிப் பனிநீர் இன்இசைத்
தோடுஅமை முழவின் துறை குரல் ஆகக்
கணக்கலை இகுக்கும் கடுங்குரற் றூம்பொடு
மலைப்பூஞ் சாரல் வண்டுயாழ் ஆக,
இன்பல் இமிழ்இசை கேட்டுக் கலிச்சிறந்து
மந்தி நல் அவை மருள்வன நோக்க்
கழைவளர் அடுக்கத்து இயலி ஆடுமயில்
நனவுப்புகு விறலியின் தோன்றும் நாடன் (**அகம்**, 82 : 1-10 **பக்**.158)

இவ்வாறாக கபிலர் இயற்கை அழகியலை மிகச் சிறப்பாக வர்ணிக்கிறார் என்பது இப்பாடல் வழியாக தெரிந்து கொள்ளலாம்.

பறம்பு மலை

பறம்பு மலை சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் வட்டம் சிங்கம்புணரிக்கு அருகில் உள்ளது. பறம்பு நாடு என்பது **பறம்பு மலையைத் தலைமையமாகக் கொண்ட பறம்பு நாடு என்பதாகும்**.” (**பாரிகாதை**, **பக்** 20). காரைக்குடியிலிருந்து

மேற்கே 42 கிலோமீட்டர் தொலைவிலும் மதுரையிலிருந்து வடக்கே 63 கிலோமீட்டர் தொலைவிலும் புதுக்கோட்டையிலிருந்து தென்மேற்கே 45 கிலோமீட்டர் தொலைவிலும் உள்ளது. **பறம்பு மலை சங்க இலக்கியங்களில் குறிப்பிடும் முக்கிய மலையாகும். இந்த மலை இயற்கையின் அருளால் செழித்து வளம்பாடு திறமாகப் போற்றப்பட்டுள்ளது. வேள்பாரியின் நாடும் மலையும் சுனையும் வளம் செய்தலைப் பண்டைய செய்யுள்களில் சிறப்பித்துப் பாடியதாகும். நாட்டின் வளமானது அதனை ஆளும் அரசனில் சிறக்க வேண்டும்**. (**பாரிகாதை பக்**. 19) பறம்பு மலையையும் அதனை ஆண்ட வேள்பாரியையும் சங்க இலக்கிய மட்டுமின்றி தமிழர் பண்பாட்டு வரலாறும் பெரிதும் போற்றுகின்றது. பறம்புமலை வெறும் புவியியல் அடையாளமாக அல்லாது தமிழர் தாராள மனமும் இயற்கை நேசமும் வீரத்துடனான ஆட்சியும் பிரதிபலிக்கும் ஒரு அடையாளமாக அமைந்துள்ளது. **பாரி நாடு, பறம்பு நாடு, பற நாடு எனவும் அவன் மலை, பறம்பு மலை எனவும் அம்மனைச்சுனை, பனிச்சுனை எனவும் நூல்களில் வழங்கப்படும்**. (**பாரிகாதை பக்**.20) பறம்பு மலை இயற்கை அழகையும், செழிப்பையும் சித்தரிக்கும் குறிஞ்சி நிலப் பகுதி.

முரசு கடிப்பு இகுப்பவும் வால்வளை துவைப்பவும்

அரசுடன் பொருத அண்ணல் நெடுவரைக்

கறங்குவெள் அருவி கல் அலைத்து ஒழுகும்

பறம்பின் கோமான் பாரியும் (**புறம்**, 158 :1-4 , **பக்**.171)

பறம்பு மலையை ஆட்சி செய்தவர் பாரி என இப்பாடல் வரிகள் தெளிவுப்படுத்துகின்றன.

பாரியின் கொடைத்தன்மை

ஆடற்கலை வல்ல விறலி பாரியை பாடிச் சென்றால் அவளுக்கு நிறை அணிகலன்களைப் பரிசிலாகக் கொடுத்து அனுப்பினான் என்பதை,

சேயிழை பெறுகுவை - வாள்நுதல் விறலி

தடவு வாய்க கலித்த மாகிதழ்க் குவளை

(**புறம்**, 105 : 1-2)

என புறநானூற்றுப் பாடல் தெளிவுபடுத்துகிறது.

பாடற்கலைஞர்கள் கேட்டால், தன் பறம்பு மலையை மட்டுமின்றி தன்னையே பாரி அவர்களுக்கு ஈந்து விடுவான் என்பதை,

பறம்பு பாடினரதுவே, அறம் பூண்டு

பாரியும், பரிசில்கள் இரப்பின்,

வாரேன் என்னான்,அவர் வரையன்னே

(**புறம்**, 108 : 4-5 **பக்.** 125)

சுகரி புரி நரம்பின் சீறியாழ் பண்ணி
விரை ஒலி கூந்தல் நும் விறலியர் பின்வா
ஆடினர் பாடினிர் செலினே (**புறம்** , 109 : 15- 16 **பக்.** 126)

என்ற வரிகள் அவனுடைய குன்றம் படை வீரருக்குத் தான் அரிது என கிணைமகள் பாடிக் கொண்டு வந்தால் அவள், அதை எளிதாகப் பெற்றுவிடலாம் என்பதை உணர்த்துகிறது.

பாரியின் கொடைத் தன்மை இவ்வுலகமே அறிந்த ஒரு உண்மையாகும். பாணர்கள் பாடலை பாடி பாரியிடம் இருந்து பல்வேறு பரிசில் பொருட்களைப் பெற்று வந்துள்ளனர். அவரது கொடையின் சிறப்பினைப் பற்றி பாணர்கள் சமதள மக்களிடம் பாடலாகப் பாடி அனைவரும் அறிந்துக் கொள்ளும் படியாக செய்தனர்.

முல்லைக்கு தேர் கொடுத்தல்

வேள்பாரியும், ஆதினியும் தங்களது திருமணத்தின் முதல் நாள் இரவில் இராவெரி மரத்தைப் பார்க்க சென்றனர். ஆனால் அவர்கள் இருவரும் வேறொரு அற்புதத்தைப் பார்த்தனர். அதாவது வெண்சாரை பாம்புகள் பகலில் ஒளி உள்வாங்கி இரவில் வெளிச்சத்தை பரப்பும் தன்மையுடையதை அறிந்தனர். இருவரும் அதை பார்த்துவிட்டு பகலில் திரும்பி வரும்போது முல்லை கொடிகள் சக்கரத்தின் ஆரக்காலை முழுமையாகச் சுற்றி தலையாட்டிபடி அவளை பார்த்துக்

கொண்டிருந்தது. படர்வது குறுமுல்லை, ஒரு மலர் பூத்தால் போதும் காடே மணக்கும் என்றே கூறியபடி பாரியின் முகத்தைப் பார்த்தாள் ஆதினி.

முல்லைக்கொடி பக்கத்து ஆரத்தைச் சுற்றியிருக்கும் விதத்தை கவனித்தாள். இச்செயலை அவள் பார்க்கும்போது எங்கோ பார்த்தது போல் இருந்தது. எங்கே என்று சிந்தித்தபோது வெண்சாரைகளின் நினைவு வந்தது. அதே பின்னல் கொண்டு வளைந்து மேலேற முயன்றது முல்லைக்கொடி. பக்கத்து ஆரத்தின் மீதும் முயற்சியைச் செய்து கொண்டு இருந்தது இன்னொரு கொடி. இடப்புறம் இருப்பதுதான் உனது சாயலில் தலைசாய்ந்து இருக்கின்றது என்றார் பாரி. குகை நமக்கானதாக மாறியது போல தேர் முல்லைகளுக்கானதாக மாறிவிட்டது என்று கூறிவிட்டு பாரியும் ஆதினியும் தேரின் சக்கரத்தை தடவி கொடுத்துக்கொண்டு நகர்ந்து சென்றனர். இச்செயலைப் பார்த்த பாணர்கள் முல்லைக்கு தனது தேரினைப் பற்றி வளர கொடுத்தான் என்று சமதளப் பரப்பிலும் பறம்பு மலையிலும் பாடித் திரிந்தனர்.

படர்கொம் பிலாலாமையோர் பைங்கொடி முல்லை

படர்கூர்ந்து காடலான் பாத்து.....

(**பா.கா** 68)

சிறுபாணாற்றுப்படை பாடல் வரிகளும்

...........................**சுரும்பு உண**

நறுவீ உறைக்கும் நாக நெடுவழிச்

சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய

(**சிறப்பாணாற்றுப்படை** 87)

என்ற பாரியின் கொடைச் சிறப்பினைப் புகழ்ந்துரைக்கிறது.

பறம்புதேசம் - பறம்பு மக்கள்

பச்சைமலை என்று ஒரு பெரிய மலை. அம்மலையின் உள்பகுதியில் நடுமலை கார மலை ஆதிமலை என்ற மூன்றடுக்கு மலைகள் இருக்கின்றன. இதைக் கடந்து சென்றால் பறம்பு மலை என்ற இன்னொரு மலை இருக்கிறது. 16 குலத்தை சேர்ந்த

மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். **குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐவகை நிலங்களிலும் நூற்றுக்கு மேற்பட்ட மனித கூட்டங்கள் தங்களின் தனித்த அடையாளங்களோடு செழித்திருந்தன. இயற்கையோடு இயைந்த வாழ்வு.(வேள்பாரி நாவல் பக்.** 26) இயற்கைக்கு சிறிதளவு கூட பாதகம் வரக்கூடாது என்று கருதி இயற்கையை தங்களது குழந்தைகள் போன்றே கவனித்தார்கள்.

ஈண்டு நின் றோர்க்கும் தோன்றும் சிறுவரை

சென்று நின் றோர்க்கும் தோன்றும் மன்ற

களிறு மென்று இட்ட கவளம் போல

நறவுப் பிழிந் திட்ட கோதுடைச் சிதறல்

வார அசும்பு ஒழுகு மூன்றில்

தேர் வீசு இருக்கை நெடியோன் குன்றே (**புறம்** , 114 : 1 - 5 **பக்** 130)

பாரி வள்ளலின் மலையின் சிறப்பை விளக்குவது மட்டுமின்றி பாரிவள்ளல் மக்களுக்கு எவ்வாறு உகந்தவர் என்பதையும் சுட்டிக் காட்டுகிறது. பாரி வள்ளல் தன் மலையின் மீது நிற்கும் அனைவருக்கும் சிறுதூரம் சென்றோர்க்கும் தன் கொடையை வழங்குகிறார். தனக்கு முன்னால் வந்து நிற்பவர்களுக்கும் இன்னும் சிறிதளவு தூரம் சென்று நின்றவர்களுக்கும் தெளிவாகத் தெரியும். **வாழ்க்கையை அதன் பசுமையான அழகிய சூழ்நிலையினின்றும் வேறு பிரித்துக் காண இயலாதவாறு மனித வாழ்க்கைக் கூறுகளும் இயற்கைக் காட்சிகளும் பின்னப் பட்டிருக்கின்றன. (பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை, பக்.** 451) பறம்பு தேசம் சங்க இலக்கியத்தில் இயற்கை வளமும் மனித நேயமும் சங்கமித்த நிலமாக சித்தரிக்கப்படுகிறது. பறம்பு மக்கள் எளிமை, அன்பு, வீரம் ஆகியவற்றால் விளங்கினர். பறம்பும் அதன் மக்களும் சேர்ந்து தமிழர் பண்பாட்டின் சிறப்பான ஒரு அத்தியாயமாக திகழ்கின்றனர்.

பறம்பின் வழியே புலவர் கபிலர்

சங்ககாலத்தில் புகழ்பெற்ற புலவர்களில் ஒருவர் புலவர் கபிலர். இவர் தம்முடைய ஆழமான கவிதைகளால் மட்டுமில்லாமல், அரசர்களின் பெருமை,

இயற்கை அழகு, மனித வாழ்க்கையின் உயர்வு ஆகியவற்றை பாடியவர். **புலவர்கள் காடுகளிலும் மலைகளிலும் சுற்றித் தம் சொந்த அனுபவத்தின் மகிழ்ச்சியிலே ஆழ்ந்து விடாமல் அவ் அனுபவத்தைத் தாம் படைக்கும் மாந்தரின் உணர்வுகளையும் செயல்களையும் விளக்க பயன்படுத்திக் கொள்கிறார்கள்.** (**பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை**, **பக்** 451) அவ்வாறாக கபிலர் தனது சொந்த அனுபவத்தின் வாயிலாகவே பறம்பு மலையையும் அதன் உணர்ச்சிகளையும் தெளிவாக புரிந்து தனது பாடல் வரிகளை மிக இனிமையாக பாடின சிறப்பை பெற்றுள்ளார். பறம்பு நாட்டை வழிநடத்தும் வேள்பாரி எனும் தலைவனின் வள்ளல் தன்மையைக் குறித்து அறியும் பெரும் புலவர் கபிலர் அதனை உறுதி செய்யும் பொருட்டு பறம்பு நாட்டை நோக்கியே தன் பயணத்தை மேற்கொள்கிறார். அந்த பயணத்தின் ஊடாக அவர் தெரிந்து கொள்ளும் ஒவ்வொரு தகவலும் அவருக்கு வியப்பை ஏற்படுத்துகின்றன. பறம்பை நோக்கி பயணிக்கும் போது நீலனின் கேள்விகளும் பதில்களும் ஆச்சரியம் தருவனாக அமைகிறது. **நாட்டை ஆள்வதுதைப் போல காடும் ஆளப்படுகிறது என நீங்கள் நினைக்கிறீர்கள். காட்டை யாராலும் ஆள முடியாது. சின்னஞ்சிறு மனிதனால் என்ன செய்ய முடியும் பகை**, **துரோகம்**, **வீரம்**, **சாவு அவ்வளவுதான் ஆனால் காட்டை பாருங்கள் எண்ணில் அடங்கா உயிர்கள் ஒவ்வொன்றும் அளவில்லா ஆற்றல் கொண்டது. ஒரு பச்சிலை வாயில் வைத்தால் அந்தக் கணமே நீங்கள் செத்து மடிவீர்கள். துளிர் விடும் ஒற்றை இலை உங்களின் வாழ்வை முடித்து வைக்கப் போதுமானது. (வேள்பாரி நாவல் பக்**. 22) பறம்பின் எல்லைக்குள் நுழைந்த மறுகணமே கபிலருக்கு புரிந்து விடுகிறது. அந்த நிலம் குறித்தும் அங்கு வசிக்கும் மக்கள் குறித்தும் தனக்கு எதுவுமே தெரியாது என்று. கபிலருக்குச் சொல்லப்படும் கதையே நமக்குச் சொல்லப்படும் கதை. பின் கபிலர் பார்க்கும் கதையே நாம் அறியும் கதை.

தனை மயக்கி மூலிகை

பறம்பை நோக்கி வரும் **கபிலர் காலில் ஏற்பட்டுள்ளது தசைப்பிடிப்பு. அது நேரம் ஆக ஆக வலியைக் கூட்டும். (வேள்பாரி நாவல் பக்.**35) என்று உணர்ந்த நீலன் தனை மயக்கி மூலிகையை கொடுக்கிறான். தனை மயக்கி மூலிகையானது

மனிதனின் நினைவை மயக்கும் தன்மை கொண்டது. உடலில் இருக்கும் வலியை மறக்க வைத்தாலும் இயக்கத்தை நிறுத்தாது. இத்தகைய மூலிகையை பாரியை சந்திப்பதற்காக சென்ற கபிலருக்கு கொடுத்து வலியை மறக்க வைத்து அழைத்துச் சென்றார்.

பறம்பின் குலச் சின்னம்

பறம்பின் குலச் சின்னமாகிய பனைமரத்தை குறித்து சொல்லும் சொற்களின் தன்மை நம்மை ஆழமாக சிந்திக்க வைக்கிறது. **தென்னை எத்திசையும் வளைந்து வளரக்கூடிய தன்மை உடையது. பனையோ தன் இயல்பிலேயே செங்குத்தாக வளரக்கூடியது. இயல்புதான் ஒன்றின் குணத்தை தீர்மானிக்கிறது வளைந்து கொடுக்காத பனைமரத்தின் இயல்பு பறம்பு நாட்டிலும் நிலை கொண்டுள்ளது.** (**வேள்பாரி நாவல் பக்**. 36) ஒவ்வொரு செயலுக்கும் சொல்லுக்கும் உள்ளே ஆழமாக பதிந்திருக்கும் உண்மைகளை இவ்வரிகள் வழியாக மிகத் தெளிவாக உணர்கிறார் கபிலர். அழகான வாசனை மலர்கள் இருந்தாலும் ஏன் பனம்பூவை குலச்சின்னமாக தெரிவு செய்தீர்கள் என்ற கேள்விக்கு **பனம் பூ வெறும் அழகு அல்ல**, **ஆயுதம். அது ஆயுதம் மட்டுமல்ல**, **பேரழகு இந்த மலைத்தொடர் எங்கும் அலைந்து திரியும் வேளீர் மக்கள். பனம் பூவின் குருத்து ஒன்றை எப்போதும் தங்களின் இடுப்பில் செருகி வைத்திருப்பார்கள். குட்டையில் தேங்கிக்கிடக்கும் நீரில் விஷம் ஏறியிருக்கும். அலைந்து திரிபவர்களுக்கு தாகம் எடுத்தால் எந்தக் குட்டை நீரிலும் பனங்குருத்தைப் போட்டு சிறிது நேரம் கழித்து அந்த நீரை அருந்துவார்கள். எவ்வித விஷமும் தாக்காது. அது ஒரு விஷமுறி பனம் பூ அழகு ஆயுதம் அருமருந்து…… இன்னும் எவ்வளவோ இருக்கின்றன**. (**வேள்பாரி நாவல் பக்**. 37) இவ்வாறாக, தங்களின் குல சின்னத்தின் மேன்மையையும் அதனால் கிடைக்கும் பலனையும் சொல்ல கபிலரின் அறிவுக்கு எட்டாத வகையான பறம்பின் சிறப்பை புரிந்துகொள்கிறார்.

பறம்பு நாடு

பறம்பு நாட்டில் மனிதன் உழைத்து விளைவிக்கக் கூடிய எந்த ஒரு பொருளும் இல்லை. திணை வகைகள், பழ வகைகள், காய்கறி வகைகள் எல்லாம் இயற்கையில் தாமாகவே விளைகின்றன. உணவு என்பது சேகரிப்பு தானே தவிர உற்பத்தி அல்ல. பிற நாடுகளை போல் உணவு உற்பத்திக்காகப் பெரும் உழைப்பைச் செலுத்த வேண்டிய தேவை இல்லை. பிற நாடுகளில் பெரும் பகுதி மக்கள் செய்யும் வேலைக்கு பறம்பு நாட்டில் சிறுபொழுது மட்டுமே செலவழிக்கப்படுகிறது. ஆண்களின் வாழ்வு முழுவதும் ஆயுதங்களோடு தான் கழிகிறது. **வேட்டைத் தொடங்கி போர் வரை எல்லாவிதமான ஆயுதங்களையும் பயன்படுத்திம் அசாதாரணமான கலையை ஒவ்வொருவரும் கற்றிருக்கின்றனர். எட்டு வயதில் காட்டை அறிந்து வர வீட்டை விட்டுக் காட்டுக்குள் அனுப்பப்படும் சிறுவர் அதன் பிறகு மாவீராகத்தான் குடில் திரும்புகின்றனர் . இவர்களின் முயற்சிக்கு இணையான முயற்சிகள் வேறு எங்கும் இல்லை. இயற்கையை அறிதல், தாவரங்கள் விலங்குகள், பறவைகள், காலநிலைகள் ஆகியவற்றைப் பற்றி இவர்களுக்கு இருக்கும் அறிவு பேரறிவுக்கு இணையான அறிவு. வேறு எவருக்கும் இல்லை. அதனாலேயே மருத்துவத்தில் அற்புதங்களைக் கைவரப் பெற்றவராக இருக்கின்றனர். மருத்துவம் கைவரப்பெற்றதாலேயே வீரத்தின் எல்லையை இன்னும் கூட்டுகின்றனர். பயிற்சியின் போது வாள்முனை நெஞ்சைக் கீறி போனாலும் கவலை கொள்ளும் வீரன் எவனும் இல்லை. அத்தாப் பொறுத்தி மூலிகையைக் கண்டறிந்த பிறகு சதையை அறுத்துக் கொண்டு போனாலும் அறுத்ததைப் பொருத்திக் கொடுக்கிறான் மருத்துவன். பறம்பு நாடு அபரிதமான ஆற்றலோடு இருக்கிறது. (வேள்பாரி நாவல் பக்**.97)

ஒவ்வொருவருக்கு எனத் தனித்த சொத்தும், எப்பாடுபட்டாயினும் அதை சேமித்துப் பெருக்க வேண்டும் என்று பெருந்தாகமும் இங்கில்லை. இயற்கை பிற உயிரினங்களுக்கு வடிவமைத்த குண எல்லைகளக் கடந்து மனிதன் போகவில்லை. மழை வந்ததும் செழிப்புறத் தழைத்து, வெயில் காலத்தில் வாடித் துவண்டு, மலரும் போது நறுமணம் வீசி , கனியும் போது அள்ளி வழங்கி, உதிரும்போது ஓசையின்றி

மண்ணில் மக்கித் நம்மை உரமாக்கியபடி பயணித்தை முடித்துக் கொள்ளும் இந்த வாழ்க்கை கபிலரை மண்டியிட்டு வணங்க வைத்தது.

பறம்பின் பாதை அமைப்பு

பறம்பு நாடு முழுவதும் மனிதர்கள் உருவாக்கிய பாதைகளே கிடையாது. பத்து ஆண்டுகளுக்கு மேலாக குடநாடும், குட்டநாடும் தொடர்ந்து முயன்றும் பறம்பு நாட்டினை அழிக்க முடியவில்லை. அதற்கு காரணம் அரண் அமைத்து நிற்கும் பறம்பு நாட்டின் மலைமகள் தான். மலைத்தொடர் இயற்கையின் பேரன் இத்தொடர்களுள் எவ்வியூர் எங்கு அமைந்துள்ளது, என்பதை பாணர்களுடன் சென்று வரும் ஒற்றர்களால் கூட கூறிட முடியாது. ஒவ்வொரு ஒற்றுனும் வேறான திசையையும் குறிப்பையும் சொல்கிறான். மலைக்குள் படை நடத்திப் போவதெல்லாம் தோராயமான கணிப்பில் தான். பறம்பு மலைத்தொடர் முழுவதும் பாதைகளே இல்லை. விலங்குகள் உருவாக்கிய பாதை தான் உண்டு. அதனை பறம்பு மக்கள் தமது தேவைக்காக விரிவுபடுத்தி அமைத்துக் கொள்கின்றனர். இதனால் தான் பறம்பையும், பாரியையும் அழிக்க முடியாத நிலை உருவானது.

உழவில்லா பறம்பு மலை

இலக்கணப் பகுதியில் ஐவகை நிலங்களின் முதன்மையான குறிஞ்சி யைப் பெரிதும் பாடிய காரணத்தாலேயே குறிஞ்சிக் கபிலர் எனப் பெயர் பெற்றார். **நிலன்களுள் முதற்கண் தோன்றியது குறிஞ்சி நிலமாவதைப் போன்றே மக்களும் வாழத் தொடங்கிய இடமும் அக்குறிஞ்சி நிலமே. தொடக்கத்தில் விலங்குகளைப் போன்றே மக்களும் உழைத்து உண்ண அறியாது கிடைத்ததை உண்டே வாழ்ந்தனர். அத்தகைய வாழ்விற்கு ஏற்றவாறு பிறர் உழைப்பின்றித் தாமாகவே விளைந்து கிடைக்கும் காய், கனி, கிழங்கு வகைகளைக் குறிஞ்சி நிலம் பெற்றிருந்தது**. (**கபிலர். பக்** 80) அவருக்கு அப்பெயர் பெறுவதற்குக் காரணமாக அமைந்தது பறம்பு மலையின் வளமும் இயற்கை சூழ்ந்த அழகியலுமே ஆகும். கபில தம் அகப்பாடல்களில் மட்டுமின்றி புறநானூற்றுப் பாடல்களும் பறம்பு மலையின் வளத்தைத் தனித்தே சிறப்பிக்கின்றார்.

அவ்வளங்கள் இன்னும் குறையாமலே உள்ளன. பறம்பு மலை செங்குத்தான பாறை அமைப்பை உடைய மலை என்பதால் சமதளத்தில் மேற்கொள்ளும் நிலைத்த விவசாயத்துக்கு அங்கு வழியில்லை. ஆனால் உழவர் உழாதனவாக விளங்கும் நால்வகைப் பிறபொருட்கள் அங்கு தாமே கிடைக்கும் . அவை மூங்கில் நெல், தீஞ்சுணைப்பலா, கொழுங்கொடி, வள்ளியின் கிழங்கு, தேனும் அதற்கு இணையான சுவையுடைய அருவி நீரும் ஆகும்.

உழவர் உழாதன நான்கு பயன் உடைத்தே
ஒன்றே வெதிரின் சிறியிலை நெல்விளை யும்மே
இரண்டே தீஞ்சுவைப் பலவின் பழம்ஊழ்க் கும்மே
மூன்றே கொழுங்கொடி வள்ளிக் கிழங்குவீழ்க் கும்மே
நான்கே அணிநிற வோரிபாய்தலின் மீதழிந்து
திணிநெடுங் குன்றம் தேன்சொரி யும்மே
வான்கண் அற்று அவன் மலையே வானத்து
மீன்கள் அற்று அதன் முறையே (**புறம்** , 109 : 3-10 **பக்**.126)

என்று கபிலர் தனது புறப்பாடல் ஒன்றில் நேரடியாகவே பிறம்பின் வளத்தைக் குறித்துக் காட்டுகிறார்.

நீரியலும் மேலாண்மையும்

பறம்பு மலை குறிஞ்சி நிலத்துக்கே உரிய அருவிகளையும் சுனைகளையும் உடையது. **பறம்பு வழங்கிய செல்வமே கபிலரின் குறிஞ்சிக் காட்சிகள் என்னும் பறம்பு மலையின் பெயரினைக் குறிக்கும் இடங்கள் மிகச்சிலவே. பறம்பு தன் பெரும் பெயரை இவ்புலவர் பெருமானின் பாடல் திறத்திலே கரைத்துக் கொண்டது. தன் பெயரை வெளியே காட்டிக் கொள்ளா விடினும்**, **கபிலரின் குறிஞ்சி ஓவியங்களிலே கொள்ளை எழில் குலவ ஓலக்கம் கொண்டிருப்பது பறம்பு மலையே ஆகும்.** (**பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை**, **பக்**. 109) சங்க காலம் தொட்டுப் பல புலவர்கள் இதனைத் தமது பாடல்களில் பதிவு

செய்துள்ளார்கள். நல்லூர் நத்தத்தனார் சிறுபாணாற்றுப்படையில் பறம்பின் பனிச்சுனை நீரைப் புகழ்ந்து பாடுகிறார்.

பிறங்கு வெள் எருவி வீழும் சாரம்

(**சிறப்பாணாற்றுப்படை**, **பா**.90)

நன்னாகனார் பறம்பின் இனிய சுனைத் தண்ணீரைப் புகழ்ந்து பாடுகிறார்.

பாரி பறம்பிற் பனிச்சுனைத் தெண்ணீர் (**புறம்** , 176 : 9 **பக்**.191)

பெருஞ்சித்தனார் தனது பாடலில் பறம்பின் வலிமையைப் போற்றிப் பாடுகிறார்.

கரங்குவெள் அருவி கல் அலைத்து ஒழுகும் (**புறம்**, 158 : 4 **பக்**. 171)

நக்கீரர் அகத்துறைப் பாடல் ஒன்றில் பறம்பில் பனிச்சுனை நீரில் எழுந்த புதுமலர் என பாடுகிறார்

தீம்பெரும் பைஞ்சுனைப் பூத்த (**அகம்**, 78 : 23 **பக்**. 152)

குறுந்தொகையில் மிளைகந்தனார் பறம்பின் இனிய சுனைத் தண்ணீரைப் புகழ்ந்து பாடுகிறார்

பாரி பறம்பிற் பனிச்சுனைத் தெண்ணீர்

தைவித் திங்கள் தண்ணிய தரினும்

வெய்ய உவர்க்கும் (**குறுந்தொகை** , 196 : 3-5 **பக்**. 233)

ஓங்கி உயர்ந்த சிகரங்களில் இருந்து விழும் அருவி நீர் தேனடைகளோடு கலந்து சுனைகளில் நிறைவதைச் சங்கப் பாடல்கள் படம் பிடித்துக் காட்டுகின்றன. வானத்தில் விளங்கும் விண்மீன்களைக் கூட எண்ணி விடலாம். ஆனால், பறம்பு

மலையின் கண் உள்ள சுனைகளின் எண்ணிக்கையை அறிந்து கொள்ள முடியாது. அருவியில் பெருகி சுனைகளில் வழிந்து நிரையும் நீரை வீணாக்காமல் சேமித்து வைப்பதற்கான நீர் நிலைகளான குளங்கள் நிறையவே உண்டு. அவையும் முறையாக பராமரிக்கப்பட்டு வேளாண்மைக்கு உதவும்படி அழியாமலும் பறம்பு மலையின் கதை கூறும் வரலாற்று எச்சங்களாகவும் உள்ளன.

குறிஞ்சிப்பாட்டில் 99 **வகையான பூக்கள்**

கபிலர் தாம் இயற்றிய குறிஞ்சிப் பாட்டில் 99 வகையான பூக்களைப் பற்றி குறிப்பிட்டுள்ளார். இவை பெரும்பாலும் குறிஞ்சி நிலத்திற்குரிய மலர்கள் என்பதும் அவை பறம்பு மலையில் நிறைந்திருக்கக் கூடியவை என்பது உணர வேண்டியதாகும்.

.... **வள் இதழ்**
ஒண் செங்காந்தள், ஆம்பல், அனிச்சம்,
தண் கயக் குவளை, குறிஞ்சி, வெட்சி,
செங்கொடுவேரி, தேமா, மணிச்சிகை,

....

பாரம், பீரம், பைங்குருக்கத்தி,
ஆரம், காழ்வை, கடிஇரும் புன்னை,
நரந்தம், நாகம், நள்ளிருள்நாறி,
மாஇருங் குருந்தும், வேங்கையும் பிறவும், (**பத்துப்பாட்டு** ,61- 95 **பக்**. 229)

என மலர் வரிசை நீள்கிறது. இதற்குச் சான்றாக சங்க இலக்கியத்தில் பறம்பு மலையாக விளங்கிய இம்மலை பக்தி இலக்கியக் காலத்தில் திருக்கொடுங்குன்றம் எனப் பெயர் விளங்கி, திருஞானசம்பந்ததால் பாடப்பெற்ற போதும் பல்வகை

நறுமணமலர்கள் நிறைந்த நகர் என்றே இம்மலையைக் குறிப்பிட்டுச் சிறப்பிக்கிறார். அவ்வரிசையிலும் அரியவகை மலர்கள் இடம் பெறுகின்றன.

கொல்லிக் காட்டு விதை

பறம்பின் ஆதிப் பொருட்களுள் ஒன்றுதான் கொல்லிக்காட்டு விதை. இதனை காக்காய் கொல்லி விதை என்றும் கூறுவர். இவ்விதை பார்ப்பதற்கு ஒரு காய் போன்று தான் இருக்கும். இந்த காயை பொடித்து மீன்கள் நிறைந்திருக்கும் குளத்தில் அல்லது ஆற்றில் போட்டாலோ அல்லது பறவைகள் கொத்தி தின்றாலோ மயங்கி விடும். பிறகு சிறிது நேரம் கழித்து மயக்கம் தெளிந்து எழுந்து விடும். காடறிய செல்லும் பறம்பு மக்கள் தங்களது உணவின் தேவைக்காக கொல்லிக்காட்டு விதையை தங்களுடன் வைத்துக் கொள்வார்கள்.

பறம்பின் செல்வம்

ஒரு நாட்டை வளம்மிக்க நாடாக மாற்றி அமைப்பது அந்நாட்டின் சேமிப்பறையில் இருக்கும் பொன்னும், மணியும், முத்தும் ஆகியவைதான் தீர்மானிக்கிறது. முத்துக்களை விட பொன்னும், மணியும் தான் மதிப்பில் உயர்ந்தவை. இத்தகைய அளவிட முடியாத செல்வத்தை வைத்திருப்பவன் பறம்பின் பாரி. பறம்பு மலையில் உள்ள சுரங்களிலும் ஆற்றிலும் பள்ளத்தாக்கிலும் விலை உயர்ந்த மணி கற்கள் கிடைக்கின்றன. **ஆதியில் நெருக்கடியான சூழலில் யாரோ ஒரு வேளீர்குடி பாழி நகரில் போய் மணிகற்களைப் பாதுகாத்து வைத்திருப்பான். அதன் பிறகு வேளிர் குடிகளிடம் இது ஒரு சடங்காக மாறிவிட்டது. குலத்தின் புதிய தலைவன் பழையவனின் காலத்தைச் சேமிப்பைப் பாழியில் போடுவது அவனது காலத்தைச் சிறப்பாக்கும் என்ற நம்பிக்கை உருவாகியுள்ளது. இப்படிப் பதினான்கு வேளிர் குடியும் தலைமுறை தலைமுறையாக மணிக்கற்களை பாழி நகரில் போட்டு விட்டு வருகின்றனர்.** (**வேள்பாரி நாவல் பக்**. 284) பறம்பு வேளிர்கள் அதைக் காத்து வருவதைக் கடமையாக கொண்டிருந்தனர்.

பூமர வைடூரியம்

யவனர்கள் மிக உயர்ந்ததாகக் கருதுவது பூமர வைடூரியத்தை தான் **வெருகின் கண் போல முழுப்பச்சை நிறத்தின் நடுவில் செங்குத்தான வெண்கோடு ஒளிரும் பூமர வைடூரியம்**. (**வேள்பாரி நாவல் பக்**. 282) அந்த வகையான வைடூரியம் மிக அதிகமாக கிடைப்பது உடுவன் மலையில் தான் அந்த மலையை ஆள்பவன் வேள் அழுந்துவன்.

வாலவாயம் வைடூரியம்

வாலவாயம் வைடூரியம் **தேன் துளியின் மீது கதிரவன் ஒளி பட்டு பின்னுக்கு போல இருக்கும்.** (**வேள் பாரி நாவல் பக்**. 283). இத்தகைய வைடூரியம் அதிகமாக கிடைப்பது தன்கன் குன்று. இக்குன்றினை ஆள்பவன் ஆதன். இவ்வைரக்கல்லினை மயிலின் கழுத்து போல கார்நீலம் இறங்கி ஓடும் வைரக்கல் என உவமைப்படுத்துகின்றனர்.

துகிர் கனகம்

துகிர் கனகம் வைடூரியத்தை நிலமெங்கும் இருக்கும் வேந்தர்கள் விரும்பி அணிவார்கள். **முயலின் குருதி சிற்றகலின் ஒளிப்பட்டு திகைத்துத் திகைத்து ஒளி சிந்தும். ஒவ்வொரு மினுக்கும் வெவ்வேறு வகையான நிறத்தில் இருக்கும்**. (**வேள்பாரி நாவல் பக்**. 283) இத்தகைய வைடூரியம் அதிகம் கிடைப்பது படவூர் வேளாண் குன்று.

கார்நீல மணிக்கற்கள்

கார்நீல மணிக்கற்களை யவன வணிகர்களும் மற்றும் நாட்டு செல்வந்தர்களும் அதிகமாக விரும்பி வாங்குவார்கள். **அந்த வகை மணிகள் அதிகம் கிடைப்பது ஈழநாட்டில் தான். எனவே அங்கிருந்து அதிகம் வாங்குகிறோம். அரச குடும்பத்தினர் பொதுவாக கார்நீலத்தை தவிர்த்துவிட்டு மாநீல**

மணிக்கற்களைத் தான் அதிகம் பயன்படுத்துவர். (**வேள்பாரி நாவல் பக்**. 283). இம்மணி கற்கள் அதிகம் கிடைப்பது மணி பல்லவத் தீவு.

புன்னாட்டு மணிக்கல்

புன்னாட்டு மணிக்கல் உமிழும் நிலத்துக்கு இடையே இல்லை. **குவளை நிறையக் கறந்த பாலை நிரப்பி, அதற்குள் அந்த மணிக்கல்லைப் போட்டால் பாலுக்கு மேல் ஒளி பரவும்". (வேள்பாரி நாவல் பக்**. 283) இம்மணிக்கல் அதிகம் கிடைப்பது புன்னாட்டில் தான். இந்நாடு வேள்முடியனின் கையில் உள்ளது.

இளஞ்சிவப்பு நிறமணிக்கல்

இளஞ்சிவப்பு நிறமணிக்கல் உள்ளுக்குள் தீச்சுடர் போல் அணியாமல் ஒளி வீசும். வேந்தர்கள் அதிகம் விரும்பி மகுடத்தில் அணிந்து கொள்வார்கள். **மகுடத்தில் சூடும் முடி மாலையின் அவ்வித மணிக்கற்களை பதித்தால் அந்த வேந்தன் எந்த போரிலும் தோல்வியைத் தழுவ மாட்டான் என்பது நம்பிக்கை**. (**வேள்பாரி நாவல் பக்**. 283). இத்தகைய மனிதர்கள் அதிகம் கிடைப்பது செறுவின் குன்றில். இது அழும்பின் வேள் குன்றாய் இருக்கிறது.

பறம்பு குடிகள் உள்பட ஒன்பது வேளீர்கள் இன்றும் பச்சை மலையை ஆளுகின்றனர். அவர்களின் நிலப்பகுதியில் கண்டெடுக்கும் மணிக்கற்களை குலதலைவனிடம் கொடுப்பார்கள். குலத் தலைவன் அவற்றை பாதுகாத்து வைப்பான். குலத் தலைவன் மரணத்தை தழுவியதும் புதியவன் பொறுப்பை ஏற்கும் போது செய்யும் முதற்பணி, ஏற்கனவே இருந்தவன் காலத்தில் சேகரிக்கப்பட்ட மணிக்கற்களைப் பறம்பு நாட்டில் இருக்கும் பாழி நகரில் போய் வைத்து விடுவது தான்.

திறளி மரம்

கபிலர் தாம் அமர்ந்திருக்கும் மரப்பலகையை பார்த்து இது எந்த மரம்? என்று கேட்டபோது திறளி மரம் என்று சொல்ல திறளி மரம் இவ்வளவு அகலமாக

இருக்குமா? என்று வியப்படைய **இது நடுப்பாகம் தான். அடிப்பாகம் இன்னும் அகலமானது. எங்களது குடிலில் வந்து பார்க்கிறீர்களா**? (**வேள்பாரி நாவல் பக்**. 58). யவன நாட்டோடு வணிகத்தொடர்பு உருவாகி பல தலைமுறைகள் உருண்டோடி விட்டன. இன்று அது உச்சத்தில் இருக்கிறது. இந்த வணிகத்தில் பெருஞ்செல்வமாக யவனர்கள் கருதுவது மிளகைத் தான். கறுத்துச் சிறுத்த அந்தத் தானியத்துக்காக யவனர்கள் எந்த விலையும் கொடுக்க தயாராக இருந்தனர். தமிழ்நிலத்தின் துறைமுகங்களை நோக்கி கப்பல்களை இழுத்து வருவது மிளகு தான். பெரும் மதில் போல் கடலில் மிதந்து கொண்டிருக்கும் யவனக் கப்பல்களின் மிளகை ஏற்ற கரையில் இருந்து ஒன்றை அடிமரத்தாலான தோணில் எடுத்துச் செல்வார்கள். அந்தத் தோணி திறளி மரத்தாலானது. துறைமுகங்களில் நிற்கும் திறளி மரத்தோணிகளே மிளகு வணிகத்தின் குறியீடாக மாறின. வணிகர்கள் கடலில் மிதக்கும் கப்பல்களை எண்ணுவதை விடக் கரையில் மிதக்கும் திறளி மரத்தோணிகளை எண்ணியே செல்வச் செழிப்பை மதிப்பிடுகின்றனர்.

நாவற்பழம்

காடு பற்றிய அறிவு இருக்கிறதா? என்று கண்டறிய நாவல் பழத்தை கொடுக்கின்றனர். **கூடையில் இருப்பது, காட்டில் பல்வேறு நாவல் மரங்களில் இருந்து பறித்த பழங்கள். ஒவ்வொரு நாவற் பழத்துக்கும் ஒவ்வொரு வகையான சுவை உண்டு. எந்த நாவற் பழத்தை முதலில் எடுத்து உண்ண வேண்டும், என்பதிலிருந்து தொடங்குகிறது காடு பற்றி அறிவு. புதிதாக எவராவது வந்தால் அவர்களுக்கு கூடை நிறைய நாவற்பழத்தைத் தருவது விருந்தோம்பல் மட்டும் அல்ல; காடு பற்றிய அவர்களது அறிதலை அளத்தலும் தான்.** (**வேள் பாரி நாவல் பக்**. 63) . நாவற்பழத்தைப் பற்றிய பழையனின் அறிவு கண்டு கபிலர் பெரும் வியப்புக்குள்ளாகிறார். **அவர் (பழையன்) கையில் எடுத்தது நரி நாவல். இது துவர்ப்பை உச்சத்துக்குக் கொண்டு போகும். அப்படியென்றால் இதற்கு முன்னால் அவர் எடுத்து வாயில் போட்டது வெண்நாவலாகத்தான் இருக்கும். அதற்குத் தான் புளிப்பு அதிகம். மொத்த வாயையும் உச்சுக்கொட்ட வைத்து விழுங்கும் எச்சிலின் வழியே பேராவலை அது தூண்டும். அதற்கு அடுத்து நரி**

நாவலை எடுத்துத் தின்றால் தூக்கலான துவர்ப்பு முற்றிலும் வேறு ஒரு சுவையைக் கொடுக்கும். (**வேள் பாரி நாவல் பக்**. 63). தான் எடுக்கப்போகும் நாவற்பழத்தைக் கொண்டு தனது காட்டு அறிவு கணிக்கப்படும் என்பது அவரால் கற்பனை செய்து கூட பார்க்க முடியாத ஒன்று.

தும்முச்சி சாறு

புதிதாக காட்டிற்குள் செல்பவருக்கு தும்முச்சி சாறு கொடுப்பது வழக்கம். ஏனெனில் காட்டிற்குள் நிறைய விஷ பூச்சிகள் காணப்படும். அவை கடித்தாலும் உணர முடியாது. இச்சாற்றினை குடித்தால் நல்ல உடல் நிலையோடு மலைக்கு மேல் செல்ல முடியும். **நானா காட்டுக்குப் புதியவன்**? **நான் காட்டினை நன்கு அறிவேன். அந்தத் துணிவில் தான் நான் பாரியைப் பார்க்கத் தன்னந்தனியாக மலையேறத் தொடங்கினேன் என்றார். மனித வழித்தடங்களின் வழியாக நீங்கள் காட்டை அறிந்திருப்பீர்கள். இது மனித வாசனை படாத காடு. ஒளி விழாத இடத்துக்குள் நுழைந்து செல்ல வேண்டும். பல வகையான பூச்சிகள் இருக்கின்றன**. **அவை கடித்த பிறகு தான் உங்களால் உணர முடியும். அதன் பின்னரும் உணர முடியாத பூச்சிகள் தான் இந்தக் காட்டில் அதிகம். எனவே**, **இதைக் குடித்தால் மட்டுமே நல்ல உடல் நிலையோடு மலைக்கு மேல் செல்ல முடியும். தற்காப்புக்கு மிகத் தேவை. (வேள்பரி நாவல் பக்**. 67). இத்தும்முச்சி சாற்றினை கபிலருக்கு கொடுத்து அழைத்துச் சென்றனர். இது ஒரு தற்காப்புச் சாறாகவும் பயன்படுத்தப்படுகிறது.

தீக்களி

பறம்பு நாட்டுக்குள் கொற்றவைக்கூத்து நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும். இக்கூத்தில் தழல் மாலை சூடும் சடங்கு நிகழ்த்தப்படும். இச்சடங்கானது நெருப்பினுள் இறங்கி ஆடுவதாகும். கொளுந்து விட்டு எரியும் நெருப்பினுள் இறங்கி ஆடுவதற்கு முன்பாக உடல் முழுவதும் தீக்களியை பூசியப்

பிறகு தான் நெருப்புக்குள் ஆடுவர். **எண்ணெய்க்குள் நீர் நுழைய முடியாததைப் போலத்தான் இந்தத் தீக்களியைத் தாண்டி தீ நுழைய முடியாது**. (**வேள்பரி நாவல் பக்**. 224). இத்தகைய தீக்களியை பயன்படுத்தி தான் பறம்பு வீரர்கள் நெருப்பினுள் புகுந்து எதிரிப் படைகளை அழித்தொழித்தனர்.

ஆதிக்களி

காட்டிற்குள் பல வகையான மரங்கள் உண்டு. அத்தகைய மரங்களினால் நன்மைகளும் உண்டு, தீமைகளும் உண்டு. தில்லை மரத்தின் கட்டைகளை எடுத்து தீப்பற்ற வைத்தால் அதிலிருந்து வெளிவரும் புகை கண்ணில் பார்வையை இழக்கச் செய்யும். **ஆற்றங்கரையை அடைந்ததும் தேக்கனை படுக்க வைத்து விட்டு உள்ளே குதித்தான். தேக்கன் சொல்லியிருந்தபடி ஆற்றில் முங்கி அதன் ஆதிக்களியை அள்ளி வந்தான். தேக்கனைச் சுற்றி மாணவர்கள் உட்கார்ந்திருந்தனர். அள்ளி வந்ததைக் கொடுத்தான். அவரது இரு கண்களின் மேலும் அந்தக் களியை அப்பினர். அவர் இமைகளுக்குள் குளுமையை உணர தொடங்கினார். (வேள்பாரி நாவல் பக்**. 310) இத்தகைய குறைபாடு ஏற்பட்டால் உடனே ஆற்றினுள் இருக்கும் ஆதிக்காளியை எடுத்து இரு கண்களிலும் வைத்தால் கண் குளிர்ச்சி அடைந்து மீண்டும் பார்வை வந்துவிடும். என்ற செய்தி வேள்பாரி வழி அறிய முடிகிறது.

வண்டுகடி மரப்பட்டை

பறம்பு நாட்டிற்குள் புதிதாக நுழைந்த கபிலருக்கு வண்டுகடி மரப்பட்டையை எடுத்து அரைத்து உடல் முழுவதும் பூசினர். இதன் தன்மை உடலின் எரிச்சலை உண்டாக்கக் கூடியது. **அது வண்டுகடி மரம். அந்த மரத்தின் இலைகளுக்குள் வண்டு பறந்தாலோ கிளைகளின் மீது உட்காந்தாலோ சிறிது நேரத்திலேயே மயங்கி கீழே விழுந்துவிடும். அதன் பிறகு, மயக்கம் தெளியாமலேயே இறந்துவிடும். இறந்ததை மொய்ப்பதற்குக்கூட எதுவும் அருகில் வராது. காட்டின் மிக அரிதான மரங்களில் வண்டுகடி மரமும் ஒன்று. (வேள்பாரி நாவல் பக்**. 302). ஏனெனில் பறம்பிற்குள் பல வகையான பூச்சிகள் உண்டு. **வண்டுகடி மரத்தின்**

பட்டையை அரைத்துத் தேய்த்தால் காட்டுப்பூச்சிகள் எவையும் அண்டாது . (வேள்பாரி நாவல் பக். 303). புதிதாக வந்த கபிலருக்கு அப்பூச்சிகளின் கடியிலிருந்து அவரது உடலை பாதுகாத்துக் கொள்ள இம்மரப்பட்டயை உடல் முழுவதும் பூசிக் கொள்கின்ற நிகழ்வினை அறிய முடிகிறது.

உப்பறுகஞ்செடி

நாகங்களின் விஷப்பல்லை பிடுங்குவதற்காக உப்பறுகஞ்செடியின் பாலை எடுத்து கையின் விரல் முழுவதும் பூசிக்கொள்ளும் வழக்கம் இருந்தது. பாண்டியருடனான போரில் பாரி பாம்புகளின் விஷத்தில் தேய்த்த முட்களால் வீரர்களுக்கு ஆபத்து வந்து விடக்கூடாது என்பதற்காக உப்பறுகஞ்செடியின் பாலினை பயன்படுத்தினார். இப்பாலை கையில் தேய்த்து காய்ந்த பிறகு உக்காமூங்கிலின் இலையை கசக்கி தேய்த்து இச்சி பிசினை கை முழுவதும் தடவிக் கொண்டனர். தடவிய சிறிது நேரத்தில் விரல்கள் காய்ந்து கவசம் போல் காட்சியளிக்கும். மேலும் முட்களை பயன்படுத்து போது எவ்வித தீங்கும் நேராது.

ஆட்கொல்லி மரம்

தேக்கன் தனது மகன்களை காணாத தேடி அலைந்த போது ஆட்கொல்லி மரத்தின் அடியில் கண்டடைந்தான். **ஆட்கொல்லி மரம் பலா இலை போல விரிந்த இலையுடையது அதன் முனை முழுவதும் சுனைசுனையாக இருக்கும் மெல்லிய முள்ளினைப் போன்ற அச்சுனை காற்றிலே உதிர்ந்து கொண்டேயிருக்கும். யாராவது அருகில் போனால் அச்சுனை உடலிலே படும். பட்டவுடன் அரிப்பெடுக்கும். நாம் கையை வைத்துத் தேய்ப்போம். தேய்த்தவுடன் அது உள்ளே போய்க் குருதியில் கலக்கும். அந்த சுனையின் நஞ்சு கொடுமையிலும் கொடுமையானது. கணநேரத்தில் மூர்ச்சையாகும். (வேள்பாரி நாவல் பக்.** 66). ஆட்கொல்லி மரத்தின் கிளையில் எந்தவொரு பறவையும் அமராது. அமர்ந்தால் அந்த கணமே செத்து விழுந்து விடும். உற்றுப் பார்த்தால் தான் தெரியும் அதன் எலும்புகள் கிளைகளுக்கு இடையே சிக்கி இருப்பது. இக்கொடிய மரம் எங்கே இருக்கிறது என்பதை பறம்பு வீரர்கள் அறிந்து குழந்தைகளுக்கு அறிவூட்டி பாதுகாப்பாக வளர்த்தனர்.

காமஞ்சுருக்கி

காமஞ்சுருக்கியின் சாறினே உணவுப் பொருட்களுடன் கலந்துச் சாப்பிட்டால் இச்சையை சற்றென வற்றச் செய்யும் தன்மை கொண்டது. உடலை வேகமாகக் களைபுறச் செய்து தூக்கத்துக்குக் கொண்டு செல்லும் வலிமை உடையது.

செவ்வெண்ணெய்

பாரி, சோழரின் யானைப்படையை வீழ்த்துவதற்காக சங்கு அட்டைப் பூச்சிகளை பயன்படுத்தினான். சங்கு அட்டையின் எல்லாம் முனைகளிலும் குருதி உறுஞ்சும் வாய் பகுதி அமைந்திருக்கும். சங்கு அட்டைகளை பிடிப்பதற்கு முன்பு கையில் செவ்வெண்ணெயை தடவிப் பிடித்தால் குருதியினை உறிஞ்சிக் குடிக்க முடியாது செவ்வண்ணையின் தன்மையைப் பயன்படுத்தி சங்கு அட்டைகளைப் பிடித்து சோழனின் யானைப்படையை வீழ்த்தியவன் பாரி.

திங்கள் மூலிகை

மூவேந்தர்களுடனே போரில் பறம்புவீரர்கள் அனைவரும் இடுப்பில் சிறுப் பையில் சிறு உருண்டைகளை நிறைய வைத்திருப்பர். போர் நடைபெறும் போதெல்லாம் அவ்வுருண்டைகளை எடுத்து பறம்பு வீரர்கள் உட்கொள்வர். இத்தகைய சிறு உருண்டை திங்கள் மூலிகையால் ஆனது. **முறியன் ஆசான் செய்து வைத்துள்ள திங்கள் மூலிகையை உட்கொண்டால் பல நாட்களுக்கு பசியெடுக்காது ஆற்றலும் குறையாது என்று.** (**வேள்பாரி நாவல் பக்**. 351). இதன் தன்மை பல நாடகளுக்கு பசியும், தாகமும் வீரர்களுக்கு உண்டாகாமல் பார்த்துக் கொள்ளும். அதே நேரம் வீரர்களின் உடலின் ஆற்றலையும், வலிமையும் குறைக்காது. இத்திங்கள் மூலிகையின் பயன்பாடு ஒவ்வொரு போர் வீரனுக்கு முக்கியத்துவம் உடையதாகும் என்பதை வேள்பாரி சுட்டுகிறது.

சங்கு அட்டைப் பூச்சி

நீர்ப்பசை இருக்கும் பாறைப் பிளவுகளிலும் மரச்செதில்களிலும் சங்கு அட்டைகள் இருக்கும். அட்டைப் பூச்சிகளுக்கு குருதியை உறிஞ்சும் வாய்ப்பகுதி ஒன்று தான் இருக்கும். ஆனால் சங்கு அட்டைப்பூச்சி விரிசங்கு வடிவில் ஆனது.

அதன் எல்லா முனைகளிலும் குருதி உறிஞ்சும் வாய்கள் உண்டு. மிக அரிதான உயிரினமான இது, மலையாற்றின் பகுதிகளில் உள்ள மர இடுக்குகளிலும் பாறை இடுக்குகளிலும் அதிகம் இருக்கும். அதனாலேயே மக்கள் அந்த காட்டுக்குள் போக மாட்டார்கள்.

நெருப்பு பூச்சி

நெருப்பு பூச்சி உச்சி மலையின் அடர் குகைக்குள் தன்னுடைய இருப்பிடத்தை கொண்ட உயிரினம் நெருப்பைப் பார்த்தால் அதைத் தொடர்ந்து அப்படியே வந்துவிடும். அதன் ரிங்கார ஓசை பல்வேறு நச்சுப்பூச்சிகளை கவர்ந்து இழுக்கக்கூடியது. கொட்டும் மழையில் பறம்பு வீரர்கள் தீப்பந்தங்களை கலந்துக் கம்பினை கூராக வெட்டி பற்ற வைத்தனர். இக்கம்பு காட்டுக்குள் கிடைக்கும் அரிய வகையான கம்பு. அதை கூராக வெட்டி தீப்பற்ற வைத்தால் அது கொழுந்து விட்டு எரியும் தன்மை உடையது. காற்றாலும், மழையாலும் அத்தீயை அணைக்க முடியாது. குச்சியை கீழே போட்டு மண்ணள்ளிக் கொட்டினால் மட்டுமே அணையும்.

பிசின்

பறம்பு வீரர்கள் பாசறையை சுற்றி நெருப்பு பந்தத்தையும், சிவப்பு நிறத்தில் பிசின் தடவிய எண்ணற்ற ஈட்டிகளையும் எரிந்துள்ளனர். அந்த ஈட்டியில் தடவப்பட்ட பிசின் இருள்வேல மரத்தின் அடியிலிருந்து உருவாகும் சிவப்பு நிறத்திலான ஒருவகை பசை. இது மழைக்கு கரையாது. இதன் பாதிப்பு இரவு நேரத்தில் தெரியாது. பகலில் சூரிய ஒளி பட்டவுடன் காரமலை முழுவதும் இருக்கும். பறக்கும் அட்டைகளும் கொம்பு தூக்கி வண்டுகளும் இப் பிசின் வாடைக்கு அங்கு வந்துவிடும் தன்மை கொண்டது. மனிதர்கள் யாரும் அதிலிருந்து தப்புவதில்லை. கொம்பு தூக்கி வண்டின் உடல் எல்லாம் முள்ளம் பன்றி போலச் சின்னஞ்சிறிய கொம்புகள் பல்லாயிரம் உண்டு. ஒரு கொம்பு மனிதனின் உடலில் பட்டால் போதும் ஒவ்வொரு விரல்களும் கையளவு பருத்துவிடும்.

முடிவுரை

பறம்பு மலை இயற்கையின் அரண்மனையாக சங்க இலக்கியத்தில் போற்றப்படுவதோடு, தமிழரின் வாழ்வியல் தத்துவத்தையும் பிரதிபலிக்கிறது.

இயற்கை என்பது வெறும் சுற்றுப்புறச் சூழல் அல்ல; அது வாழ்க்கையின் துணை, கலாசாரத்தின் காவலர், கலைநயத்தின் தோற்றம். பறம்பு மலையை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட பாடல்கள், அந்த மலையின் பசுமை, ஆறுகள், பறவைகள், மரங்கள், மலர்கள் ஆகியவற்றை மட்டுமின்றி, அவற்றோடு வாழ்ந்த மக்களின் பண்பாட்டையும் வெளிப்படுத்துகின்றன. பறம்பின் மன்னன் பாரி, தனது இயற்கைச் செல்வங்களைப் பிறருக்குத் தாராளமாக வழங்கியவர். அவர் இயற்கையோடு இணைந்து வாழ்ந்த அரசனாகவும், மக்கள் நலனுக்காக இயற்கையின் வளத்தைப் பயன்படுத்திய தலைவராகவும் போற்றப்படுகிறார். பாரியின் பெருந்தன்மை, பறம்பு மலையின் இயற்கைச் செழிப்போடு ஒன்றிணைந்து, சங்க கவிஞர்களால் நிரந்தரமாகப் பாடப்பட்டது. இதனால், பறம்பு மலை ஒரு புவியியல் இடமாக மட்டுமே இல்லாமல், தமிழர் தாராளம், அன்பு, சமத்துவம், இயற்கை நேசம் ஆகியவற்றின் நிழற்படமாக உயர்ந்துள்ளது. சங்க இலக்கியத்தில் பறம்பு மலையின் சித்திரிப்பு, இயற்கையை அழகிய பின்னணியாக மட்டுமே வைத்ததல்ல; அது மனித உணர்வுகளின் வெளிப்பாடு, காதல்-போர்-துயரம்-வாழ்வு ஆகிய அனைத்திற்கும் உயிரூட்டும் சக்தியாகக் காட்டப்பட்டுள்ளது. இவ்வகையில், பறம்பு மலை இயற்கைச் செல்வத்தின் அடையாளமாக மட்டுமல்லாது, தமிழரின் பண்பாட்டு மரபின் நிலையான சின்னமாகவும் திகழ்கிறது. எனவே, பறம்பு மலை மற்றும் பாரி பற்றிய சங்க இலக்கியப் புகழ்ச்சிகள், இயற்கை, மனிதன், அரசன், மக்கள் ஆகியோரின் உறவை வெளிப்படுத்தும் சிறந்த சான்றுகளாகும். இதன் மூலம், இயற்கையோடு தமிழர் கொண்டிருந்த ஆன்மீக உறவு, வாழ்க்கை முறையின் ஓர் அங்கமாக நிலைத்திருப்பதைக் காணலாம். இவ்வாறே, பறம்பு மலை தமிழின் இயற்கைச் சின்னமும், பண்பாட்டு அடையாளமும் ஆக நிலைத்து நிற்கிறது.

துணைநூற் பட்டியல்

1. அலெக்ஸ் ஜேக்கப் சி., ***அகநானூறு குறிஞ்சிப் பாடல்களில் உள்ளுறை***, தமிழ் மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ், E-ISSN 2581-7140, தொகுதி -2, இதழ் -1, பக். 13-19, ஜுலை 2019.
2. இரவீந்திரன் பொ., ***புறநானூற்றில் நட்பு*** , தமிழ் மொழி மற்றும் இலக்கியப் பன்னாட்டு ஆய்விதழ், E-ISSN 2581-7140, தொகுதி -6 , சிறப்பு இதழ் Issue -2, பக். 30-47, ஜுன் 2024.
3. இராகவையங்கார் ரா., ***பாரி காதை****,* அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர், 2-ம் பதிப்பு 1978.
4. கந்தசாமி முதலியார், ***சிறுப்பாணாற்றுப்படை விளக்கம்***, ஒற்றுமை ஆபீஸ், தியாகராய நகர் மதராஸ் 1947.
5. கோவிந்தன் கோ., ***சங்கத்தமிழ் புலவர் வரிசை -1 கபிலர்,*** திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்பு கழகம், லிமிடெட், திருநெல்வேலி, சென்னை 1, 1200.
6. சிவசங்கரி பொ. ***ஆற்றுப்படை இலக்கியங்களில் இயற்கையின் சிறப்பு***, தமிழ் மொழி மற்றும் இலக்கியப் பன்னாட்டு ஆய்விதழ் , E-ISSN 2581-7140, தொகுதி -2, இதழ் -1, பக். 92-97, ஜுலை 2019.
7. சுடரொளி பா., கடையேழு வள்ளல்கள், பன்னாட்டு தமிழ் ஆய்விதழ் ,ISSN 2454-3993, தொகுதி -2, இதழ் -3, பக். 116-120, ஜனவரி 2019.
8. சுதாதேவி கி., ***புறநானூற்றில் இயற்கைச் சூழல்,*** புதிய அவையம், தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்,ISSN 2456-821X, தொகுதி -7, இதழ் -2, பக்.1118-1121, ஜுன் 2023.

9. சொர்ணபமிலா இரா., ***குறிஞ்சி நில மக்களின் வாழ்வியல்***, தமிழ் மொழி மற்றும் இலக்கியப் பன்னாட்டு ஆய்விதழ், E-ISSN 2581-7140, தொகுதி -2, இதழ் -1, பக். 130-135, ஜூலை 2019.

10. தீபலட்சுமி சு., ***ஐங்குறுநூறு குறிஞ்சி திணையில் பண்பாடு சார்ந்த நிகழ்வுகள்***, தமிழ் மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ், E-ISSN 2581-7140, தொகுதி -6 , சிறப்பு இதழ் Issue -2, பக். 128-143, ஜூன் 2024.

11. துரை இராசாராம், ***குறுந்தொகை திருமகள் நிலையம்***, புதிய எண் 16, வெங்கட் நாராயணா சாலை, தி.நகர், சென்னை 600 017, இரண்டாம் பதிப்பு 2008.

12. நாகராசன், ***பத்துப்பாட்டு இரண்டாம் பகுதி (மூலமும் உரையும்),*** நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், பிலெட் 41 (பி) சிட்கோ, இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,அம்பத்தூர், சென்னை 600 098, மூன்றாம் அச்சு 2007.

13. புலியூர்க்கேசிகன், ***அகநானூறு களிற்றியானை நிரை (மூலமும் உரையும்) பாகம் -1,*** சாரதா பதிப்பகம் ஜி 4, சாந்தி அடுக்கம் -3, ஸ்ரீ கிருஷ்ணாபுரம் தெரு, ராயப்பேட்டை சென்னை 14, முதற் பதிப்பு 2010.

14. புலியூர்க்கேசிகன், ***அகநானூறு நித்திலக்கோவை (மூலமும் உரையும்) பாகம் -1*** ,சாரதா பதிப்பகம் ஜி 4, சாந்தி அடுக்கம் -3, ஸ்ரீ கிருஷ்ணாபுரம் தெரு, ராயப்பேட்டை, சென்னை 14, முதற் பதிப்பு 2010.

15. புலியூர்க்கேசிகன், ***புறநானூறு***, சாரதா பதிப்பகம், ஜி 4, சாந்தி அடுக்கம் -3, ஸ்ரீ கிருஷ்ணாபுரம் தெரு, ராயப்பேட்டை, சென்னை 14, முதற்பதிப்பு டிசம்பர் 2010.

16. மணிமொழி தி., ***குறிஞ்சித் திணையின் தொழில்கள்***, தமிழ் மொழி மற்றும் இலக்கியப் பன்னாட்டு ஆய்வுகள், E-ISSN 2581-7140, தொகுதி -2, இதழ் -1, பக். 178-184, ஜூலை 2019.
17. முத்துலட்சுமி இரா., ***தமிழ் இலக்கியங்களில் இயற்கை***, காமராஜர் கல்விசார் ஆராய்ச்சி இதழ், E-ISSN 2582-1466, தொகுதி -1, இதழ் -3, பக்.1-5, செப்டம்பர் 2019.
18. மூவேந்தன் ப.சு., ***சங்க இலக்கியத்தில் நீர் மேலாண்மை***, கிரியேட்டிவ் ரிசர்ச் எண்ணங்களின் சர்வதேச இதழ்- ஐ.ஜே.சி.ஆர், ISSN 2320-2882, தொகுதி -11, இதழ் -11, பக்.228-233, நவம்பர் 2023.
19. லதா த., ***வேளிர் குலத்தின் கொடைத்திறம்***, புதிய அவையம், தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், ISSN 2456-821X, தொகுதி -7, இதழ் -3, பக். 304-307, டிசம்பர் 2023.
20. லெட்சுமணன் ம., ***வள்ளல் பாரியம் பறம்பு மலையும் ஓர் ஆய்வு***, நிலம் சர்வதேச கலை மற்றும் கலாச்சார ஆய்விதழ், E-ISSN 2582, தொகுதி -4, இதழ் -2, பக்.48-50, பிப்ரவரி 2023.
21. வரதராசன் மு., ***பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை***, பாரி நிலையம், 90 பிராட்வே, சென்னை, 600 018, இரண்டாம் பதிப்பு 2006.
22. வெங்கடேசன் சு., ***வீரநாயகன் வேள்பாரி***, விகடன் பிரசும் 757, அண்ணா சாலை, சென்னை, அஞ்சாம் பதிப்பு, நவம்பர் 2020.